24-31
ஆகஸ்ட் 2025
ஞாயிற்றுக்கிழமை
கோயம்புத்தூர்

# தின இதிகை

DINA IDHIGAI
TAMIL WEEKLY
NEWS PAPER

வார இதழ்
விலை ரூ.5
8 பக்கங்கள்

Vol. No.1 - Issue No. 1 | RNI : TNTAM/25/A1547 | www.dinaidhigai.com | Price Rs.5/-



# தின இதிகை செய்தித்தாள் வெளியீடு
# வாழ்த்திய பிரபலங்கள் !



தின இதிகை வார இதழ் பத்திரிகை ஆகஸ்ட் 23 ம் தேதி சனிக்கிழமை கோவையில் வெளியாக இருக்கிறது. இதில் அரசியல், சினிமா, ஆன்மீகம், மருத்துவம், கல்வி, தொழில்நுட்பம் என அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய தகவல்களை அளிக்கும் வகையில் வடிவமைக்க பட்டுள்ளது.

தின இதிகை பத்திரிகையின் வெளியீட்டு விழாவுக்கும், தின இதகை பத்திரிகை குழுவினர்களுக்கும் , முன்னாள் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் திரு.அண்ணாமலை அவர்கள் வாழ்த்துச் செய்தியை பகிர்ந்துள்ளார் " அந்த வாழத்துச் செய்தியில் ", தங்களின் ''தின இதிகை'' செய்தித்தாள் வெளியீட்டு விழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். தவிர்க்க முடியாத பணிகளின் காரணமாக, என்னால் நேரில் கலந்து கொள்ள இயலவில்லை. 23 ஆகஸ்ட் 2025 அன்று நடைபெறும் இவ்விழா இனிதே நிறைவேறவும், உங்கள் புதிய செய்தித்தாள் வெளியீட்டுக்கும், உங்கள் முயற்சிகள் சிறப்பாக அமையும், என மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் செய்தித்தாள், வாசகர்களுக்கு, மதிப்புமிக்க, பாராட்டத்தக்க செய்திகளை வழங்கி, தரமான பதிப்பாகி, எங்கள் அனைவராலும் வரவேற்கப்படும் என நம்புகிறேன். " எனகுறிப்பிட்டுள்ளார்.

தினஇதிகைக்கு வாழ்த்து மடல் அனுப்பிய நடிகர் தாமு "எட்டுதிசைகளிலும்நடக்கின்ற உலகத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் கொண்டு வரும் சக்தி, இந்த செய்தித்தாளிடம் இருக்கிறது. இதை என் நண்பர்கள் நடத்துகிறார்கள் என்று தெரிந்தவுடன் அவர்களை மகிழ்ச்சியுடன் மென்மேலும் வளர வாழ்த்துகிறேன் " எனக்குறிப்பிட்டுள்ளார்.

நமது செய்தித்தாளுக்கு வாழ்த்து கூறிய நடிகர் சாம்ஸ் "என்னதான் டிஜிட்டல் உலகமாக இருந்தாலும் கையில ஒரு பேப்பர் வச்சுக்கிட்டு வசிப்பதே தனி சுகம்தான். அந்த வழியில் நம்ம தின இதிகை, பல்வேறு செய்திகளை உலகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு சேர்க்கிறது. இதற்கு வாழ்த்துத் தெரிவித்து, பெறும் உச்சத்தை அடைய வேண்டுமென வாழ்த்துகிறேன் "

கோட்டா , வி3 போன்ற வெற்றிப் படங்களை இயக்கிய அமுதவாணன் அவர்கள் நமது செய்தித்தாள் வெளியீட்டு விழாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில், "தின இதிகை" செய்தித்தாள் வெளியீட்டு விழாவிற்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்! புதிய முயற்சி வெற்றி பெற்று, செய்திஉலகில் ஒருபுதிய அத்தியாயத்தைஎழுத வாழ்த்துகிறேன். தங்களது பணி சிறக்கட்டும்!

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


K.ANNAMALAI
Bharatiya Janata Party

12-08-2025

அன்புச் சகோதரர் திரு. சதிஷ்குமார் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களின் 'தினஇதிகை' செய்தித்தாள் வெளியீட்டு விழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

தவிர்க்க முடியாத பணிகள் காரணமாக, என்னால் நேரில் கலந்து கொள்ள இயலவில்லை. 23 ஆகஸ்ட் 2025 அன்று நடைபெறும் இவ்விழா இனிதே நிறைவேறவும், உங்கள் புதிய செய்தித்தாள் வெளியீட்டுக்கும், உங்கள் முயற்சிகள் சிறப்பாக அமையவும், என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் செய்தித்தாள் வாசகர்களுக்கு மதிப்புமிக்க, பாரபட்சமற்ற செய்திகள் வழங்கி, தரமான பத்திரிகைக்கான உங்கள் அர்ப்பணிப்பு வாசகர்களால் நன்கு வரவேற்கப்படும் என நம்புகிறேன்.

அன்புடன்
K. அண்ணாமலை

@annamalai_k k.annamalai @annamalai_kuppusamy @annamalai.k



## முதல் ஆண்டு சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்த
## லைப் ஆஃப் ஆட்டிசம் டிரஸ்ட்

லைப் ஆஃப் ஆட்டிசம் டிரஸ்ட் தனது முதல் ஆண்டு சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. கடந்த ஒரு ஆண்டில் இந்த அறக்கட்டளை பல்வேறு நலத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1. கிணத்துக்கிடவு சிறப்பு பள்ளிக்கு குளிர்சாதன பெட்டி, ஃப்ரீசர், ஸ்டேஷனரி பொருட்கள், இனிப்பு மற்றும் கார உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.
2. ஐம்பது பேருக்கு மேற்பட்ட சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.
3. இரண்டு லட்ச ரூபாய்க்கும் அதிகமாக மருத்துவச் செலவுகளுக்கான நிதி உதவி வழங்கப்பட்டது.
4. சிறப்பு குழந்தைகளுக்கான பள்ளிகளுக்கு ஃபீஸ் கொடுத்தனர்.
5. சிறப்பு குழந்தைகளுக்கு ஆலோசனை (கவுன்சிலிங்) சேவைகள் அளிக்கப்பட்டன.

பல நன்மைகள் செய்து வரும் இவ்வறக்கட்டளை இனிவரும் காலங்களிலும் வெற்றியுடன் சேவையைத் தொடரக் கோரி தின இதிகை நாளிதழ் மனமார வாழ்த்துகிறது.

## அக்யூஸ்ட் " படத்தின் வெற்றி குறித்து
### நடிகர் - தயாரிப்பாளர் தயா பன்னீர்செல்வம் பேச்சு



• கோவை

கோவை வசந்தவாசல் கவி மன்றத்தின் 30 ஆம் ஆண்டு தொடக்க விழா வடகோவை மாருதி ஞானசபாவில் நடைபெற்றது இந்த விழாவில் அக்யூஸ்ட் பட கதாநாயகன் உதயா மற்றும் கோவையை சேர்ந்த தயாரிப்பாளரும் , நடிகருமான "தயா"பன்னீர்செல்வம், இசையமைப்பாளர் நரேன் பாலகுமார் , ராப் இசை பாடகர் ஹைடு கார்த்தி , பாடலாசிரியர் கவிஞர் தேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு , கவிதை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குபரிசுகள் வழங்கி உரையாற்றினர் . இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட "தயா" கூறுகையில், நடிகர் உதயா, அஜ்மல், யோகிபாபு கூட்டணியில் இயக்குனர் பிரபு சீனிவாஸ் இயக்கத்தில் "அக்யூஸ்ட்" எனும் மிகப்பெரிய படத்தை மூன்று பேர் தயாரிப்பு கூட்டணியில் மிக விரைவாக படப்பிடிப்பை முடித்தது மட்டும் அல்லாமல் அந்தப் படத்தை வெளியிட்டு, தற்சமயம் மூன்று வாரங்களை கடந்து வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடிக்கொண்டிருக்கிறது.

"அக்யூஸ்ட் " திரைப்படம் தமிழகம் முழுவதும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும், மிக பிரமாண்டமாக கதை, இசை, ஆக்சன், காதல், காமெடி என இந்த ஆண்டின் மிகச் சிறந்த படமாக இந்த படத்தை மக்கள் அங்கீகரித்து உள்ளதாகவும் கூறினார்.

தற்போது அக்யூஸ்ட் படம் மூலம் என் சொந்த மண் கோவையில் இருந்து புகழ் பெற்ற நடிகர்கள் வரிசையில் தானும் இணைந்துள்ளதை சொல்லி மகிழ்ந்தார் . இதற்கு காரணமாக இருந்த இயக்குநர் பாண்டியராஜன் , நடிகர் உதயா , இயக்குநர் பிரபு ஸ்ரீனிவாஸ் ஆகியோருக்கு நன்றி கூறினார் . இந்த "அக்யூஸ்ட் " படத்தில் நடிகர்அவதாரம் தனக்கு மிகப் பெரிய ஆச்சரியத்தையும், இன்ப அதிர்ச்சியையும் தந்திருப்பதாக நடிகர் மற்றும் தயாரிப்பாளர் தயா பன்னீர்செல்வம் விழாவில் பேசினார்.

## மதுரையில் த.வெ.க.வின் பிரமாண்ட மாநாடு



• மதுரை

மதுரையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தவெகவின் 2–வது மாநில மாநாட்டில், எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தனது கட்சியின் கூட்டணி நிலைப்பாடு குறித்தும் அக்கட்சியின் தலைவர் விஜய் பேசினார்.

தமிழக அரசியலில் புதிய கட்சியாக உருவாக்கி சட்டப்பேரவைத் தேர்தலில் களம் இறங்க உள்ளது விஜய்யின் தவெககட்சி. ஏற்கனவே விக்கிரவாண்டியில் முதல் மாநாட்டை நடத்திய தவெக தற்போது 2–வது மாநில மாமாநாட்டை மதுரையில் நடத்தியுள்ளது .

இதில் பேசியஅக்கட்சியின் தலைவர் விஜய் " ஒரு கானகத்தில் சிங்கம், புலி, நரி என்று பல்வேறு மிருகங்கள் இருந்தாலும் சிங்கம்தான் காட்டின் ராஜா. அந்த சிங்கம் வேட்டைக்குப் போனாலும் 'சிங்கிளாக' தான்.தன்னைவிட பெரிய விலங்கைதான் வேட்டையாடும். அதுதான் நம் நிலைப்பாடு.

சினிமாவிலும், அரசியலிலும் எனக்கு மிகவும் பிடித்தவர் எம்ஜிஆர். அவரோடு பழகும் வாய்ப்புஎனக்குக் கிடைக்கவில்லை ஆனால், அவருடைய குணம்கொண்ட இந்தமதுரை மண்ணில்பிறந்த விஜயகாந்த்துடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. அவரை என்றும் மறக்க முடியாது. தவெகவின்அரசியல் உண்மையானது, உணர்வுப்பூர்வமானது, நல்லவர்களுக்கானது, நாடுகளுக்கானது, நல்லதை மட்டுமே செய்யும்அரசியல். என்னைப்பற்றிப் பேசும் அரசியல் ஆய்வாளர்களுக்கு நான் சொல்வது ஒன்றுதான். இந்தக் கூட்டம் ஆட்சியாளர்களுக்கு வேட்டா, நம்மள கோட்டைக்கு அனுப்பப்போகும் ரூட்டா மாறும்.

மதுரை கிழக்கு விஜய், மதுரை மேற்கு விஜய், சோழவந்தான் விஜய், உசிலம் பட்டி விஜய். என்னடா, எல்லா தொகுதிகளிலும் என் பெயரையே சொல்கிறேன் என நினைக்கிறீர்களா? ஆம், 234 தொகுதிகளிலும் நான்தான் வேட்பாளர்என்று நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தவெகவின் வேட்பாளருக்கு வாக்களித்தால் அது எனக்குவாக்களிப்பதாகும்.என்னை சினிமாக்காரன் என்று சொல்கிறார்கள். எல்லாசினிமாக்காரனும் முட்டாள் கிடையாது , எல்லா அரசியல்வாதியும் அறிவாளியும் கிடையாது. என பல விஷயங்களுடன்,ஒரு குட்டி கதையுடன் முடித்தார் விஜய்.

# இந்தியாவுக்கான பிரத்யேக சமூக வலைத்தளங்களை உருவாக்குங்கள்

## இந்திய இளைஞர்களுக்கு மோடி அழைப்பு

• புதுடில்லி

இந்தியாவின் 79–வது சுதந்திர தினத்தன்று, பிரதமர் மோடி டெல்லி செங்கோட்டையில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில், இந்தியர்கள் வெளிநாட்டு சமூக ஊடகங்களையே அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் பிரதமர் மோடி அவர்கள் இளைஞர்களை பார்த்து மூன்று கேள்விகளை முன் வைத்தார். அவை பின்வருமாறு: ஏன் இந்தியாவில் நமக்கான சமூக ஊடக தளங்கள் இல்லை? நாம் ஏன் மற்றவர்களை சார்ந்து இருக்க வேண்டும்? இந்தியாவின் பொருளாதாரம் ஏன் வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும்? என்ற கேள்விகளை இளைஞர்கள் மத்தியில் தொடுத்து எழுச்சியை உருவாக்கினார். இந்தியாவின் டிஜிட்டல் சுயாட்சி மிக முக்கியம் என்பதை வலியுறுத்திய பிரதமர் மோடி, இந்திய இளைஞர்கள் தங்கள் சொந்த சமூக வலைதளங்களை (Facebook, Instagram, X போன்றவை) உருவாக்க வேண்டும் என்று சுதந்திர தினத்தன்று (வெள்ளிக்கிழமை) அழைப்பு விடுத்தார். இதனால் நாட்டின் தொழில்நுட்பச் சூழல் பாதுகாப்பாகவும் சுயாதீனமாகவும் இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.


“ஆபரேட்டிங் சிஸ்டம் முதல் சைபர் பாதுகாப்பு வரை, டீப் டெக் முதல் க்ருமெய் நுண்ணறிவு (AI) வரை அனைத்தும் நம்முடையதாக வேண்டும்,'' என சுதந்திர தின உரையில் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியாவின் UPI (Unified Payments Interface) சாதனையை எடுத்துக்காட்டிய அவர், “இன்றைய உலகை ஆச்சரியப் படுத்தும் வகையில் இந்தியாவின் UPI செயல்படுகிறது. உலகளாவிய நேரடி பரிவர்த்தனைகளில் 50% இந்தியா மட்டும் செய்து வருகிறது. இளைஞர்களே, நம்முடைய சமூக வலைதளங்களை நாம் ஏன் உருவாக்கக் கூடாது.

தற்போது, இந்தியாவுக்கென தனிப்பட்ட ஆபரேட்டிங் சிஸ்டம் மற்றும் சமூக வலைதளங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாளாக உள்ளது. தன் தரவுகள் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளைப் பாதுகாப்பது எந்த சுயாட்சி நாட்டிற்கும் அவசியம் என்பதையும் பிரதமர் வலியுறுத்தினார்.



# சமூக வலைத்தளங்களின் புதிய அத்தியாயம்
# IndieMa.in



• கோவை

பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தின உரையில், இந்திய இளைஞர்கள், இந்தியாவுக்கென சொந்தமாக சமூக ஊடகங்களை உருவாக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அந்த வகையில் முதல் நபராக, கோவையைச் சேர்ந்த திரைப்பட இயக்குனர், நிறுவனர் மற்றும் கோவையில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்ட வேட்பாளருமான அருண்காந்த் அவர்கள் சொந்தமாகவே ஒரு தளத்தை உருவாக்கிவிட்டார்.

IndieMa.in என்ற பெயரில் தயாராக உள்ள இந்த தளம், செப்டம்பர் 3, 2025 அன்று செயல்பாட்டுக்குத் தயாராக உள்ளது. இது, சமூக ஊடகங்களின் இப்போது உள்ள சிக்கல்களைத் தவிர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு புதிய அனுபவம் மற்றும் ஆரோக்கியம் மிகுந்த டிஜிட்டல் சூழலை உபயோகிப்பவர்களுக்கு உருவாக்கும்.

IndieMa.in, "உலகில் உள்ள மனிதர்கள் அனைவரையும் ஒன்றிணைத்தல்" என்ற நோக்கத்துடனும், தத்துவத்தின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டது IndieMa.in. இது பொதுவாக உள்ள "followers" (பின்தொடர்பவர்கள்) அல்லது "friend request" (நண்பர் கோரிக்கை) போன்ற அம்சங்களை நீக்கி, எந்தத் தடையும் இல்லாமல், இயல்பாகவே அனைத்து பயனர்களையும் இணைக்கிறது. இந்த தனித்துவமான வலைத்தளம், ஒவ்வொரு பதிவிற்கும் தன் குறிப்பிட்ட இலக்கு பார்வையாளர்களைச் சென்றடைய, பணம் செலுத்தி விளம்பரம் (paid ads) செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் செயல்படும்.


அருண்காந்த்

இந்தத் தளம் நேர்மறை மற்றும் பயனுள்ளத் தகவல் பரிமாற்றத்தை மையமாகக் கொண்டுள்ளது. இழிவான மற்றும் வெறுப்புப் பேச்சுகள் (hate speech) முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளன. மேலும், பொதுவான கருத்துக்களும் (public comments), ட்ரோலிங் (trolling) எனப்படும் கேலி செய்யும் பதிவுகளும் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளன. ஒரு பதிவிற்கு மெசேஜ் அனுப்பும்போது, அது அந்த பதிவை பதிவு செய்தவற்கு மட்டும் தனிப்பட்ட முறையில் சென்றடையும். இங்கு பாராட்டுவது ஒரு முக்கிய நிகழ்வாக பார்க்கப்படும்; பயனர்கள் ஒரு குறிப்பிட்டக் காரணத்துடன் மற்றவர்களைப் பாராட்டினால் மட்டுமே, அவர்கள் தங்கள் சொந்த பதிவுகளை உருவாக்க அனுமதிக்கப்படுவார்கள்.

இந்தத் தளத்தின் முக்கிய அம்சமாக, தனிநபர் அல்லாமல், உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும். என்ன சொல்லப்படுகிறது என்பது முதலில் வரும், யார் சொல்கிறார்கள் என்பது வாசகரின் கிளிக் செய்த பிறகு மட்டுமே தெரியும். இந்த அம்சம் தானாகவே அனைவருக்கும் ஒரு சமமான களத்தை உருவாக்குகிறது.

பயனர்கள் தாங்கள் விரும்பாத தலைப்புகளை முற்றிலும் தவிர்க்க negative keyword list ஒன்றையும் குறிப்பிடலாம். குறிப்பிட்ட பிரிவுகள், பதிவின் வகை மற்றும் Area Pincode போன்ற புவியியல் துல்லியத்துடன் பதிவுகளை வடிகட்டிப் பார்க்கும் வசதியும் இதில் உள்ளது. IndieMa.in, குழு மெசேஜ் (group messaging) சிக்கலையும் தீர்க்கிறது. பயனர்கள் தனிப்பட்ட குழுக்கள் (private networks and chapters) மற்றும் பிரிவுகளுக்குள் தகவல் பரிமாற்றம் செய்ய உதவுகிறது. இந்தத் தனிப்பட்ட வலைப்பின்னல்களில், மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து அம்சங்களையும் முழுமையாகப் பயன்படுத்த முடியும், இது தேவையற்றத் தகவல்கள் (spam) கொண்ட உடனடி செய்தி செயலிகளின் தேவையை நீக்குகிறது.

சுருங்கச்சொன்னால், IndieMa.in என்பது நேர்மறை சமூக தொடர்புகளின் ஆற்றலுக்கு ஒரு சான்றாக விளங்குகிறது, கட்டுப்பாட்டை மென்பொருளிடம் அல்லாமல், மீண்டும் மக்களிடம் ஒப்படைக்கிறது. இது சிறந்த சிந்தனைகள் அழகான விளைவுகளாக வளர ஒரு சூழலை உருவாக்குகிறது.

தொழில்முறை பயன்பாட்டிற்கான சந்தா கட்டணம் ஒரு வருடத்திற்கு வெறும் ரூ.1,000/– மட்டுமே, மேலும் வருவாய் ஈட்டுவதற்கான புதிய வழிகளை உருவாக்கும் கூடுதல் அம்சங்களையும் இது கொண்டுள்ளது. என இந்த தளத்தை உருவாக்கிய அருண்காந்த் கூறியுள்ளார்.

24-31
ஆகஸ்ட் 2025
ஞாயிற்றுக்கிழமை
கோயம்புத்தூர்

# தின இதிகை

DINA IDHIGAI
TAMIL WEEKLY
NEWSPAPER

வார இதழ்
விலை ரூ.5
8 பக்கங்கள்

Vol. No.1 - Issue No. 1 | RNI : TNTAM/25/A1547 | www.dinaidhigai.com | Price Rs.5/-




# நெருங்கும் 2026 தேர்தல்

## தமிழக அரசியல் கட்சிகளின் நிலை-நிலைப்பாடு?



• கோவை

தமிழ்நாட்டின் சட்டமன்றத்தேர்தல் 2026, நெருங்கி வரும் நிலையில், அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்கான வேலைகளில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. கட்சிகள், கூட்டணி உடன் பாட்டிற்கான சந்திப்புகளையும், பேச்சுவார்த்தைகளையும் நடத்தி வருகிறது.

கடந்த 2021 சட்டமன்றத்தேர்தலில் வெற்றி பெற்ற திமுக தலைமையிலான கூட்டணி, தற்போது ஆட்சி பொறுப்பில் உள்ள நிலையில், அதே கூட்டணியை மேலும் வலுப்படுத்தி, வெற்றியை மீண்டும் பதிவு செய்யத்திட்டமிட்டுள்ளது. மேலும் சில கட்சிகளை இணைத்து தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருகிறது .

அதுமட்டுமின்றி, ஆட்சியில் செய்த பல நலத்திட்டங்களை, மக்களிடம் கொண்டு சேர்த்து இரண்டாவது முறையாக தொடர்ந்து ஆட்சி பிடிக்க மும்முனை காட்டி வருகிறது. திமுக.கூட்டணியில்தற்போதுகாங்கிரஸ், விசிக, மதிமுக, கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், மனிதநேய மக்கள் கட்சி, கொங்கு மக்கள் தேசிய கட்சி, மக்கள் நீதி மய்யம் மற்றும் முஸ்லீம் இயக்கங்கள் உள்ளன.

திராவிட மாடல் 2.0–ல் இதுவரை அடையாத உச்சங்களை இனி தமிழ்நாடு அடையும் என முதல்வர் ஸ்டாலின் கூறிவருகிறார். தற்போது எதிர்க்கட்சி இருக்கையில் அமர்ந்துள்ளது அதிமுக, இம்முறைஎப்படியாவது ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் "'மக்களை காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்பதை நோக்கமாக கொண்டு தமிழ்நாடு முழுவதும் தனது சுற்றுப்பயணத்தை துவங்கியுள்ளார் மக்களை சந்தித்துப் பரப்புரை செய்து வருகிறார்.

தற்போது நிலவரப்படி பாரதிய ஜனதா உடன் அதிகாரப்பூர்வமான கூட்டணியை உறுதி செய்துள்ளது .2019–ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு பிறகு பாஜகவுடன் இணைந்து பணியாற்ற உள்ளது. பா.ஜ.க உடனான கூட்டணியை உறுதி செய்துள்ள அதிமுக மீண்டும் பா.ஜ.க உடனான கூட்டணி அமைந்ததைப் பற்றிய கேள்விக்கு, எங்களுக்கு எந்த கட்சியும் எதிரி இல்லை, எங்களுடைய ஒரே நோக்கம் தி.மு.க.வை வீழ்த்துவதுதான். பல கட்சிகள் அ.தி.மு.க. கூட்டணியில் வந்து இணையும், 2026 தேர்தலில் வெற்றிப் பெற்று ஆட்சியை பிடிப்போம் என தனது பிரச்சாரத்தில் கூறி வருகிறார்.

நாம் தமிழர் கட்சியைப் பொறுத்தவரை ஐந்தாவது முறையும் தனித்து போட்டியிடப்போவதாக, அறிவித்துள்ளார் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான். அவர் கூறுகையில், விஜய் வருகிறார் ஓட்டு பிரிந்து கட்சி கலைந்து விடும், அதனால் கூட்டணி வைப்பேன் என்று எதிர்பார்க்க வேண்டாம். செத்து சாம்பலானாலும் 2026 தேர்தலில், 234 தொகுதிகளில் தனித்து தான் போட்டியிடுவோம் என திட்டவட்டமாக கூறியுள்ளார்.

பா.ம.க. கட்சியில் சமீப காலமாக சில முரண்பாடு காரணத்தால், ராமதாஸ் தரப்பு, தலைவர் அன்புமணி தரப்பு, என இரு தரப்பாக செயல் பட்டு வருகிறது. இரு தரப்பும் தனித்தனியாகப் பொதுக்குழு கூட்டம் அறிவிப்பை அறிவித்தது.

இந்நிலையில் ஆகஸ்ட் மாதம் 9ஆம் தேதி, அன்புமணி தலைமையில், ராமதாஸ் அவர்களுக்கு இருக்கை ஒதுக்கப்பட்டு, மாமல்லபுரத்தில் பொதுக்குழு நடந்தது. அதில் அன்புமணி கூறுகையில், வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வை வீழ்த்துவோம் எனவும் தொண்டர்கள் விரும்பும் மெகா கூட்டணி அமையும் எனவும் பேசியிருக்கிறார்.

த.வெ.க என்ற பெயரில் புதியதாக கட்சி துவங்கிய நடிகர் விஜய் அவர்கள் வரும் 2026 தேர்தலில், முதன்முறையாகப் போட்டியிட உள்ள நிலையில், தனது இரண்டாவது மாநாட்டை சமீபத்தில் நடத்தி முடித்துள்ளார் . தி.மு.க., பா.ஜ.க.வுடன் ஒருபோதும் கூட்டணி இல்லையென்றும் மற்ற கட்சிகள் த.வெ.க. தலைமையை ஏற்று கூட்டணியில் இணையலாம் என கூறி வருகிறார்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பாரதிய ஜனதா கட்சிக் கூட்டணியில் இருந்து விலகுவதாக சமீபத்தில் அறிவித்தது அவர்களின் நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், தற்போது என்.டி.ஏ கூட்டணியில் தொடர்வதாக அறிவித்தவுள்ளது. தேமுதிக, மற்றும் மற்ற கட்சிகள்,இம்முறை எந்த கூட்டணியில் இணைகின்றன என்பது இன்னும் அதிகாரப்பூர்வமாக முடிவுசெய்யப்படவில்லை, தேர்தல் நெருங்கும் வேளையில் இவர்களின் முடிவு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. திமுக, அதிமுக, நாம் தமிழர், தவெக என நான்கு முனை போட்டி அமையலாம் என அரசியல் வல்லுநர்கள் கூறி வருகின்றனர்.

தற்போதைய சூழலில், கடந்த தேர்தல்களில் காணப்பட்டக் கூட்டணிகள் அப்படியே தொடருமா? அல்லது புதிய கூட்டணிகள் உருவாகுமா? என்பது முக்கியமான கேள்வி. தேர்தலுக்கு இன்னும் 9 மாதங்களே உள்ள நிலையில் ஒவ்வொரு கட்சியும் தங்களது அரசியல் மதிப்பீடு, மக்கள் எதிர்பார்ப்பு, வாக்காளர்களின் மனநிலை போன்றவற்றை வைத்து எதிர்வரும் மாதங்களில் கூட்டணி முடிவுகளை அறிவிப்பார்கள் எனவும் கூறப்படுகிறது.




## அலாஸ்காவில் டிரம்ப்-புதின் சந்திப்பு!

### இந்தியா மீதான வரியை

## மேலும் அதிகரிக்குமா அமெரிக்கா ?

3 ஆண்டுகளாக ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் நீடித்து வரும் போரை நிறுத்துவது பற்றி பேச்சு வார்த்தை நடத்த, கடந்த ஆகஸ்ட் 15, 2025 அன்று , அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இருவரும் அமெரிக்காவில் உள்ள அலாஸ்காவில் சந்தித்தனர்.

உலகநாடுகள் உற்று நோக்கிய இந்த சந்திப்பில், பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும் என பெரிதும் பேசப்பட்டது. அதே நேரம் இந்தியா மீதான 50% வரியை அமெரிக்கா மேலும் அதிகரிக்குமா என்பதையும், இந்த சந்திப்பில் தெரிய வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆகையால் இந்தியாவுக்கும் இந்த சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த பேச்சு வார்த்தை சுமார் 3 மணி நேரம் நடந்தது. ஆனால் எந்த ஒரு முடிவும் சாதகமாக எட்டப்படவில்லை.

இதையடுத்து டிரம்ப் மற்றும் புதின் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது புதின் கூறுகையில், போர் நிறுத்தம் பற்றிய இந்த பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

தற்போதைய பேச்சுவார்த்தை உக்ரைனில் அமைதியை கொண்டுவரும் எனவும், புதின் உடனான இந்த பேச்சுவார்த்தை மிக பயனுள்ளதாக இருந்தது என டிரம்ப் கருத்துத்தெரிவித்தார். அதன்பின், அதிபர் ஜெலன்ஸ்கி–யை வரவழைத்து, ஐரோப்பிய தலைவர்களுடன் வெள்ளைமாளிகையில் டிரம்ப் சந்தித்துப் பேசியது மிக முக்கியமாகப் பார்க்கப்படுகிறது.

அதேவேளையில், அலாஸ்காவில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பை சந்தித்தது குறித்து பிரதமர் மோடியிடம் ரஷிய அதிபர் புதின் தொலைபேசி மூலம் பேசினார். டிரம்ப் உடனான சந்திப்புக் குறித்துத் தன்னிடம் பேசிய தனது நண்பரான ரஷிய அதிபர் புதினுக்கு நன்றி எனவும், உக்ரைன் போருக்கு அமைதியான முறையில் தீர்வு காண இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வரும். என்றும், அதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா தொடர்ந்து துணை நிற்கும் எனவும், பிரதமர் மோடி எக்ஸ் பதிவில் வெளியிட்டுள்ளார்.

## இந்தியாவில் முழு சந்திர கிரகணம்



இந்தியா முழுவதும் வரும் செப்டம்பர் மாதம் 7 மற்றும் 8 -ம் தேதியிலான இரவு ஒரு முழு சந்திர கிரகணம் நிகழ உள்ளது. சந்திர கிரகணம் என்பது, பூமியின் நிழல்சந்திரனின் மீது விழும் போது ஏற்படும் இயற்கை நிகழ்வாகும். இது சூரியன், பூமி மற்றும் சந்திரன் ஒரே நேர்கோட்டில் வரும்போது மட்டுமே சாத்தியமாகிறது. மேலும், சந்திர கிரகணம் முழுநிலவு (பௌர்ணமி) நாளிலேயே நடைபெறும்.

**பகுதி கிரகணம் தொடக்கம்**
இரவு 9:57 மணி (7 செப்டம்பர்)

**முழு கிரகணம் தொடக்கம்**
இரவு 11:01 மணி (7 செப்டம்பர்)

**மத்திய கிரகணம்**
இரவு 11:42 மணி (7 செப்டம்பர்)

**முழு கிரகணம் முடிவு**
அதிகாலை 00:23 மணி (8 செப்டம்பர்)

**பகுதி கிரகணம் முடிவு**
அதிகாலை 1:27 மணி (8 செப்டம்பர்)

சந்திரன் முழு கிரகணம் அடையும் போது அது வானில் மறையாது; மாறாக, அழகான சிவப்புநிறத்தில் மிளிரும். இதற்கு காரணம், சூரியக் கதிர்களின் சிவப்பு நிறம் பூமியின் வாயுமண்டலத்தில் சிதறி சந்திரனில் பிரதிபலிப்பதாகும். சந்திர கிரகணத்தை கண்களால் நேரடியாக பார்ப்பது முற்றிலும் பாதுகாப்பானது. எந்த விதமான தீங்கும் ஏற்படாது.

இது அனைவரும் ரசிக்கக்கூடிய ஒரு அரிய நிகழ்வாகும். எனவே, செப்டம்பர் 7 ம் தேதி இரவு 9:30 மணிக்குப்பிறகு வெளியில் வந்து, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து இந்த அழகிய நிகழ்வை கண்டுகளிக்கலாம்.



# எவரெஸ்ட் சிகரத்தில் ஒரு ஓட்டம்

## கோயம்புத்தூரைச் சேர்ந்த நௌஷீன் பானு சாந்த்





உலகின் உயரமான மாரத்தானான, டென்சிங் ஹிலாரி எவரெஸ்ட் மாரத்தானை இரண்டு முறை வென்ற தமிழ்நாட்டின் ஒரே பெண்மணி ஆவார்.கம்பீரமாக நிற்கும் நௌஷீன். தனது விடாமுயற்சி, பொறுமை மற்றும் குடும்பத்தினருடனான ஒற்றுமையால் அவர் வலிமை பெற்றார்.

கடல் மட்டத்திலிருந்து 17,598 அடி உயரத்தில், ஒவ்வொரு அடியையும் போராடி எடுத்து வைக்க வேண்டிய சூழலில், கோயம்புத்தூரைச் சேர்ந்த நௌஷீன் பானு சந்த், தனது விடாமுயற்சியால் ஒரு கதையை உருவாக்கியுள்ளார். தனக்குசவால்விடுத்த துன்பங்களுக்கு எதிராக, அவரது மீள்தன்மை கொண்ட மனநிலை, டென்சிங் ஹிலாரி எவரெஸ்ட் மாரத்தானை ஒருமுறை அல்ல, இருமுறைவென்றுசாதனைப் படைக்க உதவியது. தமிழ்நாட்டிலிருந்து இந்த சாதனையைப் படைத்த ஒரே பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

டென்சிங் ஹிலாரி எவரெஸ்ட் மாரத்தான், உலகின் மிகக் கடினமான பந்தயங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது 5,364 மீட்டர் உயரத்தில் உள்ள எவரெஸ்ட் பேஸ் கேம்பில் தொடங்கி, கடுமையான இமயமலைப் பகுதிகள் வழியாக கீழே இறங்கிச் செல்லும் ஒரு மாரத்தான் ஆகும்.

கோயம்புத்தூரைச் சேர்ந்த இந்த அல்ட்ரா–டிஸ்டன்ஸ் தடகள வீராங்கனை, 10 மணி 45 நிமிடங்களில் இந்தப் பந்தயத்தை முடித்தார். இது சாத்தியமற்றதாகத் தோன்றும் தூரத்தை நிஜமானதாகவும், அசாதாரணமானதாகவும் உணரச் செய்தது.

மிகச் சிலரால் மட்டுமே முயன்று பார்க்கப்பட்ட இந்த உயர்–உயர மாரத்தான் பயணமானது, நௌஷீனுக்கு பட்டப்படிப்புக்குப் பிறகு தொடங்கியது. ஓமனில் வளர்ந்த அவர், ஏரோநாட்டிகல் இன்ஜினியரிங் பட்டப்படிப்பிற்காக இந்தியா திரும்பினார்.

படிப்படியாக அவரது கவனம் விளையாட்டின் மீது திரும்பியது.செயல்திறன், விடாமுயற்சி, மற்றும் பொறுமை கொண்ட ஒருவராக இருப்பது, ஒருவரின் கடினத்தன்மை, ஆன்ம பலம் மற்றும் இரக்க குணங்களை வளர்க்கிறது என்று நம்பும் நௌஷீன், இதன் மூலம் வரும் தலைமுறைக்கு ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க முடியும் என்று கூறுகிறார்.

அல்ட்ரா–டிஸ்டன்ஸ் ஸ்போர்ட்டிங் என்பது இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலும் ஒரு தனித்துவமான விளையாட்டு ஆகும். வழக்கமான 42.195 கி.மீ. மாரத்தான் தூரத்தையும் தாண்டிய சகிப்புத்தன்மையே இதன் அடிப்படை. இது அல்ட்ரா–டிஸ்டன்ஸ் ஸ்போர்ட்டிங், டிரெயில் ரன்னிங் அல்லது மலைகள் மற்றும் காடுகள் போன்ற கரடுமுரடான நிலப்பரப்புகளில் அதிக உயரத்தில் ஓடும் நேவிகேஷன் ஸ்போர்ட்டிங் என்றும் அறியப்படுகிறது.

**வென்ற விருதுகள்**

நவம்பர் 2023–ல், லே–வில் 11,500 அடி உயரத்தில் நடந்த அதிக உயர மாரத்தானில் 4 மணி 58 நிமிடங்களில் பந்தய தூரத்தைக் கடந்து அவர் புதிய உலகச் சாதனை படைத்தார். இந்த சாதனை, டிரான்ஸ்–இமயமலைப் பகுதியில் ஓட்டம் மற்றும் ஸ்கேட்டிங் ஆகிய இரட்டை விளையாட்டுச் சாதனையை நிகழ்த்திய முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை அவருக்குப் பெற்றுத் தந்தது. இந்திய விளையாட்டுத் துறைக்கு தனது பங்களிப்பாக இந்தச் சாதனைகளை அவர் கருதுகிறார்.

இந்தச் சாதனைகளின் அடிப்படையில், மே




29, 2024 அன்று, நௌஷீன் உலகின் உயரமான மாரத்தானை வெற்றிகரமாக முடித்தார். 42.195 கி.மீ. தூரத்தை 10 மணி 44 நிமிடங்கள் மற்றும் 24 வினாடிகளில் கடந்து, இந்தச் சாதனையை நிகழ்த்திய தமிழ்நாட்டின் ஒரே பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார். சரியாக ஒரு வருடத்திற்கு முன்பு, இதே கடுமையான பந்தயத்தை 10 மணி 44 நிமிடங்களில் முடித்து, எவரெஸ்ட் சிகரத்திலிருந்து இந்த பந்தயத்தை இரண்டு முறை வென்ற ஒரே பெண்மணி என்ற தனது நிலையை அவர் நிலைநாட்டினார். இந்த பந்தயப் பாதையானது, –10C போன்ற கடுமையான வானிலை மற்றும் கடல் மட்டத்தில் உள்ள ஆக்சிஜன் அளவில் பாதியளவு மட்டுமே உள்ள உயரமான, கடினமான நிலப்பரப்புகளைக் கொண்டது.

உடல் ரீதியான வரம்புகளுக்கு எதிரான ஒரு போராட்டமாக இருந்தபோதிலும், அவரது பாதை குறிப்பிடத்தக்கத் தனிப்பட்ட தியாகங்களையும் கோரியது. அவரது பயணங்களுக்கு நிதி திரட்டுவதற்காக தனது விலைமதிப்பற்ற நகைகளையும் சொத்துக்களையும் விற்க வேண்டியிருந்தது. இந்த சவாலான காலகட்டத்தில், அவரது குடும்பத்தினரின் ஆதரவு அவருக்கு உறுதுணையாக இருந்தது.

அவரது முதல் எவரெஸ்ட் மாரத்தானுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் அவர் படித்த ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியிடமிருந்து கூடுதல் ஆதரவு கிடைத்தது. 2022–ல் பட்டம் பெற்ற நவ்ஷீன், தடகளம் மற்றும் விளையாட்டு முயற்சிகளில் சிறந்து விளங்கினார். அவருக்குத் தேவையான தடகள உபகரணங்கள், நிதியுதவி மற்றும் ஆதரவை அவரது கல்லூரி வழங்கியது. மேலும், சென்னையைச் சேர்ந்த தமிழ்நாடு மலையேறுதல் சங்கம், அத்தியாவசியமான ராப்பெல்லிங் மற்றும் ஜுமாரிங் நுட்பங்களில் அவருக்குப் பயிற்சி அளித்து, உபகரணங்களை வழங்கியது. 2026–க்குள் எவரெஸ்ட் சிகரத்தில் 70 கி.மீ. அல்ட்ரா மாரத்தானை வெல்வதே நௌஷீனின் அடுத்த இலக்கு. இந்தக் கோடையில், அவர் தனது எல்லைகளைத் தாண்டிச் செல்லத் தயாராகி வருகிறார்.

"முதல் அடியை வைக்கும்போது நம்பிக்கை பிறக்கலாம், ஆனால் கடைசி அடியை எட்டும்போதுதான் நிம்மதி கிடைக்கும்" என்று அவர் நம்புகிறார்.

# மொழி வளம் மட்டுமே ஒருவரை வளமைப் படுத்த முடியுமா?


## முடியும் என்கிறார்

## ஆஷா சுப்ரமணியன்

● கோவை

மொழி வளம் மட்டுமே ஒருவரை வளமைப்படுத்த முடியுமா? ஆம், முடியும். இதற்குச் சமூகத்தில் தன்னை நிரூபித்திருப்பவர்களில் ஒருவர் பேராசிரியர் ஆஷா சுப்ரமணியன் M.A.,B.Ed.,M.Phil.,NET.,PGDCA.,PhD.

திருச்சியில் புகழ்பெற்ற தனியார் கல்லூரியில் இளங்கலை, முதுகலை, கல்வியியல் மற்றும் ஆய்வியல் பட்டங்களைப் பெற்ற அவர், தேசிய தகுதித் தேர்வில் 4 முறை வெற்றி பெற்றவர். இவரது கல்வி மேன்மையை மதித்து கோவை பாரதியார் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் வழங்கியுள்ளது. சுமார் 13 ஆண்டுகளாகபல்வேறு கல்லூரிகளில் கற்பித்த அனுபவம், அவருக்கு இன்றும் கற்பித்தலின் மீதான தீவிர ஆர்வத்தை அளித்து



வருகிறது. மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அவர் மேற்கொள்ளும் பணிகள் குறிப்பிடத்தக்கவை. தன்னம்பிக்கை உரையாடல்கள், வாழ்க்கை வழிகாட்டுதல்கள், கல்வி உதவித்தொகை வழங்கல், போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்புகள், போட்டித் தேர்வுகளுக்கான முன்னேற்பாடுகள் என்று அனைத்தையும் ஒருங்கிணைத்து மகத்தான சேவையைச் செய்து வருகிறார். எழுத்துலகில் சாதிக்க வேண்டும் என்ற ஆசையுடன் எழுத்தாளராகவும் தன்னை நிலைநிறுத்தியுள்ளார். அவரின் தூண்டுதலால் பல மாணவிகள் இன்று ஆசிரியராகவும், எழுத்தாளராகவும் உருவாகியுள்ளனர். இவரது எழுத்துப் பயணத்துக்கான விதை, அவரது பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களால் விதைக்கப்பட்டது என்று அவர் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார்.

குறிப்பாக,ஒப்பியல் இலக்கியநுணுக்கங்களை உலகிற்கு அறிமுகப் படுத்திய பேராசிரியர் க.பூரணச்சந்திரனை அவர் தனது முன்னோடியாகக் கருதுகிறார்.

அவரது முனைவர் பட்ட ஆய்வு "ஒப்பீட்டு நோக்கில் சங்க பெண்பாற் புலவர்களும் தற்கால பெண் கவிஞர்களும்", சர்வதேச ஆராய்ச்சி இணையத்தளத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இதுவே அவரை இலக்கிய ஆராய்ச்சியில் மேலும் முன்னோக்கி நகர்த்தியுள்ளது.


மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளில் சிறப்புப் பேச்சாளராகப் பங்கேற்று வருகிறார். கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக இன்னும் பல சாதனைகளை மாணவர் சமூகத்துடன் சேர்ந்து செய்ய வேண்டும் என்பது அவரது கனவு. சில தொண்டு நிறுவனங்களுடனும் இணைந்து தனது எழுத்துப்பணியைப் பகிர்ந்து சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

இளம் வயதில் இரு மாணவிகளைத் தத்தெடுத்து, அவர்களுக்குத் தேவையான கல்வியை அளித்து வருகிறார். அதுமட்டுமல்லாது, பல நூலகங்களுக்கு இலவசமாக நூல்கள் வழங்கி வருவதும் அவரின் சமூக அக்கறையை வெளிப்படுத்துகிறது.

எழுத்தாளர், ஆய்வாளர் மட்டுமன்றி, ஊடக உலகத்திலும் தன்னை நிலைநிறுத்தி உள்ளார். சிங்கப்பூர் பொழில் பண்பலையில் தொகுப்பாளராக தனது குரலை வழங்கிவரும் அவர், தொழில்நுட்பத் தளங்களிலும் (மொபைல் செயலிகள் உட்பட) கதையாக்கங்களாக எழுத்துக்களை வழங்கி வருகிறார். புதுமைகளை எழுதவும், பேசவும் எப்போதும் தயாராக உள்ள பேராசிரியர் ஆஷா சுப்ரமணியனின் பாதைகள் அனைத்தும் ஆய்வின் மணம் வீசுகின்றன. இலக்கிய உலகம் அவருக்கு இன்னும் பல வாய்ப்புகளைத் திறந்து வைக்கட்டும் என வாழ்த்துகள்.




# குவாண்டம் கம்ப்யூட்டிங்கில் செயற்கை நுண்ணறிவு புரட்சிகரமான எதிர்காலம்



**மனிதனின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சிக்கலான உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வலுவான கருவியாகவும் அமையும்**

• கோவை

இன்றைய உலகில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI) மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டிங் (Quantum Computing) ஆகிய இரண்டும் வேகமாக வளர்ந்து வரும் துறைகளாகத் திகழ்கின்றன. இவை தனித்தனியாகவே மனிதகுல முன்னேற்றத்திற்கு பெரும் பங்காற்றி வருகின்றன. ஆனால், இவை இரண்டும் ஒன்றிணையும் போது உருவாகப்போகும் தாக்கம் மனித வரலாற்றில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது.



### குவாண்டம் கம்ப்யூட்டிங் என்றால்..

பாரம்பரிய கணினிகள் "0" மற்றும் "1" எனும் இரண்டு நிலைகளில் மட்டுமே செயல்படுகின்றன. ஆனால் குவாண்டம் கம்ப்யூட்டர்கள் "கியூபிட் (Qubit)" என்ற அடிப்படையைப் பயன்படுத்துகின்றன. ஒரு கியூபிட் ஒரே நேரத்தில் பல நிலைகளை பிரதிபலிக்க முடியும். இதனால், கணக்கீடுகள் மிக அதிவேகமாக நடைபெறுகின்றன.

### செயற்கை நுண்ணறிவின் தற்போதைய வரம்புகள்

இன்றைய AI அமைப்புகள் பெரும் தரவுகளை (Big Data) செயலாக்கும் திறன் பெற்றுள்ளன. எனினும், சிக்கலான கணித மாதிரிகள் அல்லது மிகப்பெரிய தரவுகளை குறுகிய நேரத்தில் தீர்க்கும் போது சில வரம்புகளைச் சந்திக்கின்றன. குவாண்டம் கம்ப்யூட்டிங் மற்றும் AI இணைந்தால் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் புதிய மருந்துகள், சிகிச்சைகள் விரைவில் கண்டறியப்படும். பங்கு சந்தை முன்னறிவிப்பு மற்றும் அபாய மேலாண்மை மிகவும் துல்லியமாக செய்யப்படும். வானிலை முன்னறிவிப்புகள் நம்பகமாக உருவாக்கப்பட்டு இயற்கை பேரழிவுகளுக்கான தடுப்பு நடவடிக்கைகள் எளிதாகும். சைபர் பாதுகாப்பில் தரவு குறியாக்கம் (Encryption) உடனடி முறையில் வலுப்படுத்தப்படும்.

### எதிர்காலம் எப்படியிருக்கும்?

குவாண்டம் AI பரவலாக பயன்பாட்டிற்கு வரும் போது, மனிதர்களின் முடிவெடுக்கும் திறன் புதிய உயரங்களை எட்டும். மருத்துவம், அறிவியல், தொழில், கல்வி, சுற்றுச்சூழல் போன்ற அனைத்துத் துறைகளிலும் வேகமான முன்னேற்றம் நிகழும். இது மனிதனின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சிக்கலான உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வலுவான கருவியாகவும் அமையும். செயற்கை நுண்ணறிவும் குவாண்டம் கம்ப்யூட்டிங்கும் தனித்தனியாகவே அதிசயங்களை நிகழ்த்துகின்றன. ஆனால், இவை இரண்டும் ஒன்றிணையும் போது உருவாகப் போகும் புதிய புரட்சி மனித வரலாற்றின் திசையை மாற்றும். எதிர்காலம் நம்மை ஆச்சரியப் படுத்தும் அதிசயங்களால் நிரம்பியதாக இருக்கும்.

**ப.முத்து சுப்பிரமணியன்**
இணை பேராசிரியர்
மின்னணு மற்றும் தொடர்பியல் பொறியியல் துறை
கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரி,
கோயம்புத்தூர்–14.



# முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் பலன்கள் என்ன?

தமிழ்நாட்டில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் வீடு தேடிச் சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களை விநியோகம் செய்யும்' தாயுமானவர் திட்டத்தை' தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, தண்டையார்பேட்டை, கோபால்நகர் மற்றும் அன்னை சத்யா நகர் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவையை கொடியசைத்து கடந்த 12ம் தேதி துவக்கி வைத்தார். இந்த திட்டம் குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் சுமையை குறைக்கும் நோக்கில் இல்லத்திற்கேச் சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களைவிநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாதத்தில் 2 வது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ளகுடும்ப அட்டைதாரர்களின் விவரம் உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்பாதுகாப்பு துறையிடமிருந்து பெறப்பட்டு,கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மின்னணு எடைத்தராசு, இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் கூடிய வாகனங்களுடன் ரேஷன் பொருட்களைபாதுகாப்பாக தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்றுநியாய விற்பனையாளர்கள் விநியோகிப்பார்கள். இதில் 70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று பொருட்கள் வழங்குவதால் நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தைச் சிறப்புற செய்வதுடன் அவர்களது உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்ய வழி வகுக்கும். இந்த திட்டத்தின் மூலம் சுமார் 21,70,454 பேர் பயனடைவார்கள்

## கோயம்புத்தூர் பைக்கர்ஸ் கம்யூனிட்டியின் விழிப்புணர்வு

கோயம்புத்தூர் பைக்கர்ஸ் கம்யூனிட்டி இந்தியா முழுவதும் பசுமையை வலியுறுத்தி விழிப்புணர்வு பைக் பேரணி ஏற்பாடு செய்திருந்தது. இந்த பைக் பேரணியில் பல்வேறு இடங்களில் மரக்கன்றுகள் நட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் 'பசுமை இந்தியா' என்ற இலக்கோடு செயல்பட்டு வருகிறது.

முன்னதாக, "கலாம் உலக சாதனை பைக் ரைட்" எனும் சிறப்பு விழிப்புணர்வு பைக் பயணம் கோயம்புத்தூரில் இருந்து கன்னியாகுமரி சென்று திரும்பும் வகையில் வெற்றிகரமாக பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பயணத்தின் போது, மரக்கன்று நடுதல், போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு, மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த செய்திகள்மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்லப்பட்டன.



தமிழ்நாடு சமூகம் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக செயல்படும் இச்சமூகம், தமிழக அரசின் ஆதரவுடன் விழிப்புணர்வு பேரணிகள் மரக்கன்று நடுதல், இரத்ததான முகாம்கள் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத்திட்டங்களையும் வெற்றிகரமாக செயல்படுத்திவருகிறது. இந்நிலையில் ஆகஸ்ட் 16ஆம் தேதி "ஒருநாள் பைக் ரைட்" எனும் சிறப்பு பைக் பயணம் கோயம்புத்தூரிலிருந்து கொல்லங் கோடு வரை மேற்கொள்ளப் பட்டது. இப்பயணத்தில், பாலக்காடு பைக் ரைடிங் கிளப் உறுப்பினர்கள் 10 பைகர்கள் மற்றும் கோயம்புத்தூர் பைக்கர்ஸ் கம்யூனிட்டி 50 பைகர்களும் (இதில் 3 பெண் பைக்கர்களும் அடங்குவர்) பங்கேற்றனர். பயணத்தின் போது கொல்லங்கோடு எஸ் ஆர்என்கிலேவ் ரிசார்ட் வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. கேரளாவின் இயற்கை அழகுபைகர்களுக்கு சிறந்த அனுபவமாக அமைந்தது.

கோயம்புத்தூர் பைக்கர் கம்யூனிட்டி உறுப்பினர்கள் தெரிவித்ததாவது: "தமிழக அரசும் கேரள அரசும் இணைந்து பைக்கர்களுக்கு ஆதரவு அளித்தால், ஒரு மிகப் பெரிய இடைமாநில பைக் விழிப்புணர்வு பேரணி நடத்துவது சாத்தியமாகும். இது புதிய சாதனையாகப் பதிவதோடு, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மேம்படுத்தவும் மேலும் பலரை ஊக்குவிக்கும்" என அவர்கள் வலியுறுத்தினர்.







# FASTag ஆண்டு பாஸ் அறிமுகம்

# ரூ.3000 கட்டணத்தில் 200 பயணங்கள்

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (NHAI) 2025 ஆகஸ்ட் 15–ம் தேதி FASTag ஆண்டுபாஸ்–ஐ அறிமுகப்படுத்தியது. தனியார் வாகனங்களுக்கு ரூ.3,000 கட்டணத்தில் வழங்கப்படும் இந்த பாஸ் மூலம், குறிப்பிட்ட தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச்சாலைகளில் அதிகபட்சம் 200 பயணங்கள் செய்யலாம் அல்லது ஒரு வருடம் வரை செல்லுபடியாகும். இதை Rajmarg Yatra செயலி அல்லது NHAI இணைய தளம் மூலம் எளிதாக செயல்படுத்தலாம்.இது அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு சுங்கக் கட்டணம் செலுத்தும் சிரமத்தைக் குறைக்கிறது.

**FASTag ஆண்டு பாஸ் நன்மைகள்**

குறிப்பிட்ட தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச்சாலைகளில் அதிகபட்சம் 200 பயணங்கள் அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு மிகுந்த சுலபம். 1 ஆண்டு செல்லுபடியாகும் (அல்லது 200 பயணங்கள் முடியும் வரை).

சுங்கச்சாவடிகளில் விரைவான பயணம் காத்திருக்கும் நேரம் குறைவு, நீண்ட பயணங்களில் வசதி. மீண்டும் மீண்டும் ரீசார்ஜ் செய்ய தேவையில்லை

ஒரே முறை கட்டணம் செலுத்தினால் போதும். அடிக்கடி நெடுஞ்சாலையில் செல்லும் பயணிகளுக்கு செலவுக் குறைவு, தனித்தனியாக செலுத்துவதை விட சிக்கனமாகும். சுங்கச்சாவடிகளில் போக்குவரத்து நெரிசல் குறையும், வாகன எரிபொருள் வீணாவதும், மாசுபாடு உண்டாகுவதும் குறையும்.

ஒவ்வொரு தனியார் வாகனத்திற்கும் ஒரு பாஸ் மட்டுமே ஒரே வாகனத்திற்கு பல பாஸ் அனுமதி இல்லை.வர்த்தக வாகனங்களுக்கு செல்லாது (டாக்சி, பேருந்து, சரக்கு வாகனங்கள் முதலியன). தேசியநெடுஞ்சாலை(NH)மற்றும்விரைவுச் சாலை (NE) சுங்கச்சாவடிகளில் மட்டுமே செல்லுபடியாகும்.

மாநில நெடுஞ்சாலைகள், நகரச் சாலைகள், பார்க்கிங் போன்ற இடங்களில் செல்லாது. தானியங்கி புதுப்பிப்பு இல்லை பாஸ் காலாவதியானதும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். 200 பயணங்கள் முடிந்த பின், FASTag மீண்டும் வழக்கமான கட்டண முறைக்கு மாறும். ஒவ்வொரு முறையும் உங்கள் வாகனம் NHAI சுங்கச்சாவடியில் கடக்கும் போதெல்லாம் அது ஒரு பயணமாக கணக்கிடப்படும்.

# ஸ்டார் சிறப்பு பள்ளியில் சிறப்பு மருத்துவ முகாம்



• கோவை

கோயம்புத்தூர் ஒண்டிப்புதூர் பகுதியில் செயல்பட்டு வரும் ஸ்டார் சிறப்பு பள்ளியில் 04.08.2025 அன்று மாற்றுத் திறனுடைய சிறப்பு மாணவ மாணவியர்களுக்கு மருத்துவ முகாம் நடைபெற்றது.

கோயம்புத்தூர் அக்கூஷயம் சாரிட்டபிள் டிரஸ்ட், லயன்ஸ் கிளப் ஆப் கோயம்புத்தூர், அன்பு மற்றும் கற்பகம் மருத்துவ மனை இணைந்து இந்த முகாமை நடத்தினார்.இந்த முகாமில், மாணவர்களுக்கு மருத்துவ ஆலோசனை, பரிசோதனை மற்றும்சுகாதார நல்வாழ்வுதொடர்பான தகவல் கள் வழங்கப்பட்டு பெற்றோர்கள் மற்றும் மாணவர் கள்பெருமகிழ்ச்சியுடன்முகாமை பயன்படுத்தினர்.

ஸ்டார் பள்ளியில், சிறப்பு குழந்தைகளை மேம்படுத்தும் வகையில், தொழில்முறைக்கல்வி மற்றும் பல வித கல்விகளையும் பயிற்றுவித்து வருகின்றனர். மேலும் சிறப்புக் குழந்தைகளைப் பராமரிக்கும் நலம் மிகுந்த முறைகள் கண்டு, விழாவிற்கு வந்த அனைவரும் வியந்தனர்.

நிகழ்ச்சியைக் கோயம்புத்தூர் அக்கூஷயம் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவன தலைவருமான DrPMJF D. கர்ணன் மற்றும் லயன்ஸ் கிளப் ஆப் கோயம் புத்தூர் அன்பு சங்கத்தின் தலைவர் எஸ்.பார்த்திபன் இணைந்து ஒருங்கிணைத்து நடத்தினார்.

சிறப்பு விருந்தினர்களாக பள்ளிபாளையம் பேரூராட்சி தலைவர், மாவட்டத்தின் முதல் துணை நிலை ஆளுநர் பிஎஸ். செல்வராஜ், இரண்டாம் துணை நிலை ஆளுநர் வழக்கறிஞர் சூரி நந்தகோபால், ஜி.எல்.டி. ஒருங்கிணைப்பாளர் பாஸ்கர், சிபிஎம் கலைக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஜஸ்வந்த் மோகன், லயன்ஸ் கிளப் ஆப் கோவை அன்பு சங்கத்தின் செயலாளர் சிவக்குமார், சங்கத்தின் பொருளாளர் வளர்மதி, ஸ்டார் சிறப்பு பள்ளி தலைமை ஆசிரியர் சிஸ்டர் சபீனா, கோவை அகூஷயம் சாரிட்டபிள் டிரஸ்ட் பொறுப்பாளர் பிரகாஷ், துணைத் தலைவர் செல்வி ரீத்து கர்ணா, கோவை அன்புசங்க நிர்வாகிகள் செல்வம், மாணிக்கம், கந்தசாமி, சக்திவேல், செல்வி தமிழ் செல்வன், சூலூர் டவுன் சங்கத்தைச் சார்ந்த வட்டாரத் தலைவர் ஈஸ்வரன், கோவை அக்கூஷயம் சங்கத்தின் பொருளாளர் வைபிரேஷன் வீரா, லயன்ஸ் போட்டோகிராஃபர் ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.



# கோவை காந்தி மாநகரில் கிருஷ்ண ஜெயந்தி விழா

கிருஷ்ண ஜெயந்தி விழா – கோவை காந்திமா நகரில் சிறப்பாக நடைபெற்றது கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு, கோவை காந்திமா நகரில் அமைந்துள்ள, ஓம் ஸ்ரீ உலகளந்த பெருமாள் திருக்கோவிலில், கடந்த 16.08.2025 (சனிக்கிழமை) மாலை, கிருஷ்ண ஜெயந்தி விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில், தாயாரும் பெருமாளும் புறப்பாடு கண்டு அருளினர். இரவு நேரத்தில், குழந்தைகள் “கண்ணன் ராதா ஆயர் குழு” என்ற பெயரில் மாறுவேடமணிந்து பல்வேறு ஆன்மீக நிகழ்ச்சி களையும், உரியடி போன்ற பாரம்பரிய நிகழ்ச்சி களையும் சிறப்பாக நடத்தினர். மேலும், ஸ்ரீ ரங்கம் "மீசை லேசா தையார் பந்தம்ஆச்சாரம்" குழுவின் முயற்சியுடன், சிறப்பு வேஷங்களில் பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும், ஸ்ரீ கண்ணன் அருளிய ஸ்ரீ மத் பகவத்கீதை புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது.

# திருப்பூர்-மூணாறு நேரடி பஸ் இயக்கம்

• திருப்பூர்

முன்பு, திருப்பூரில் இருந்து நேரடியாக மூணார் வரை செல்ல பஸ் வசதி இல்லாத நிலையில், உடுமலை வரை சென்று அங்கிருந்து பஸ்களில் செல்ல வேண்டிய நிலை இருந்தது. இதனால் மக்கள் மிகவும் சிரமப் பட்டனர். திருப்பூரில் மூணாறுக்கு நேரடி பஸ் இயக்கம் துவங்கப் பட்டு இயங்குகிறது. இந்த பேருந்து வசதிக்காக பொதுமக்கள் நீண்ட நாட்களாக காத்திருந்தனர், இந்த நேரடி பேருந்து சேவை மிக வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதாக பொது மக்கள் கருத்து கூறி வருகின்றனர். திருப்பூர் மத்திய பஸ் ஸ்டாண்டில் இருந்து மதியம், 2:30 மணிக்கு புறப்பட்டு, மாலை, 4:15 க்கு பல்லடம் வழியாக உடுமலை செல்லும் பஸ், சின்னாறு, மறையூர் வழியாக பயணித்து, இரவு 9:00க்கு மூணாறு சென்றடைகிறது. மூணாறில் காலை 6:30 மணிக்கு புறப்பட்டு, காலை, 10:30 க்கு உடுமலை வந்து, மதியம், 2:30 மணிக்கு திருப்பூர் வந்தடைகிறது. திருப்பூரில் இருந்து மூணாறு பயணிக்க பயணி ஒருவருக்கு கட்டணம், 125 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.


TOLET கடை வாடகைக்கு
பாரதி காலனி, மலுமிச்சம்பட்டி,
செட்டிபாளையம் மெயின் ரோடு, கோவை - 641050
FIRST FLOOR
1) 10 Feet x 22 Feet
2) 8 Feet x 22 Feet
77080 70040 77080 70053



LIC
LIFE INSURANCE CORPORATION OF INDIA
வாழும் போதும் .....
வாழ்க்கைக்கு பிறகும்....
STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist
வந்தபின் வருந்துவதை விட
வருமுன் காப்பது நல்லது
LIFE INSURANCE | MEDICLAIM | VEHICLE INSURANCE | HOUSING LOANS
A.THILAGAVATHI
LIFE & HEALTH INSURANCE ADVISOR
96592 61116 - 96591 61116
WELCOME INSURANCE
VARADAIYENGAR PALAYAM, KONDAYAM PALAYAM (post), COIMBATORE-641110



POTHIGAI MEDICALS AND DISTRIBUTOR
DOOR DELIVERY AVAILABLE
15% to 20% DISCOUNT
FOR MONTHLY MEDICINE
98940 52024 98940 52034
34/1, Ganapathy Managar, Vetri Vinayagar Temple street, Coimbatore -641006 pothigaimedicalscbe@gmail.com



DT TRANSPORTS
ALL OVER BANGALORE, CHENNAI, COIMBATORE, KERALA
ALL TYPES OF TRANSPORTS VEHICLES AVAILABLE
9123553340
9952776677
9944425156
B112, Cheran Maanagar, 3rd Bus Stop, Coimbatore - 641 035.


# 5,000 முதலீடு இருந்தாலே கேக் பிசினஸில் சாதிக்கலாம்

## ஹோம் பேக்கர் பிருந்தா சுரேஷ்

இந்த கேக் தயாரிப்புப் பற்றியும், கேக் மீதானா ஆர்வம் பற்றியும் பிருந்தாவிடம் கேட்டபோது," எனக்குச் சிறுவயதி லிருந்தே சமையல் கலையின் மீது ஆர்வம் அதிகம், பிளஸ் டு முடித்தவுடன் கேட்டரிங் படிக்க ஆசைப்பட்டேன், ஆனால் பெற்றோரின் விருப்பப்படி எம்பிஏ முடித்த உடன் வங்கித் துறையில் நுழைந்தேன். இருந்தாலும் சமையல் கலை மீதான ஆர்வம் எனக்குத் குறையவில்லை என் கணவரிடம் கூறினேன் அவர் என்னை ஊக்கப்படுத்தி கேக் தயாரிப்பதற்கான அனைத்து உதவிகளையும் செய்தார். வங்கித் தொழிலை விட்டுவிட்டு முழு நேர கேக் தயாரிப்பில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன் என்றார். இவர் முதலில் தன் குடும்பத்திற்காகவும் குழந்தைகளுக்காகவும் கேக் தயாரிக்க ஆரம்பித்து தற்போது instagramல் saikrshna cakes cbe என்ற பெயரில் 4000 வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று வெற்றி கரமாக இயங்கி வருகிறது. பட்டர் கிரீம் கேக், வெண்ணிலா, ஸ்ட்ராபெரி, சாக்லேட் உள்ளிட்ட பல பிளேவர்களில் கேக்குகளைத் தயாரித்துள்ளார். சிறந்தத் தயாரிப்புகளை உருவாக்குவது சந்தைக்கேற்ப புதிய பிளேவர்களைஅறிமுகப்படுத்துவது என வாடிக்கையாளர்களின் விருப்பத் திற்கேற்ப கேக்குகளைத் தயாரித்து கோவை பகுதியில் விற்பனை செய்து வருகிறார். மேலும் தன்னம்பிக்கையுடன் தன் சொந்தக்காலில் நின்று சாதிக்க வேண்டும் என விரும்பும் பெண்களுக்கு பேக்கிங் பயிற்சி வகுப்புகளை சிறந்த முறையில் எடுத்து வருகிறார். பேக்கிங் துறையில் சாதிக்க விரும்பும் பெண்கள் இவர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

Saikrishna cake's cbe



தொடர்புக்கு

instagram-saikrishna cake's, Coimbatore, Cell -8637428031


Passion is easy.
Service is rare.
Choose service.
Your big day isn't about us — it's about you.
From the first shot to the final delivery, we ensure service, trust, and memories that last a lifetime.

BOOK WEDS
Share Life Moments
Your Exclusive Wedding Storytellers
+919566565889 | +919385325069
www.visualsupply.in/bookweds
BOOK NOW
Powered by Visual Supply Works, Coimbatore.



SKYRAMS
Grow beyond sky
skyrams.com
skyramsoutdooradvertising



HOME MADE HAIR OIL
SOWMI'S HIGROW
CARE OF A MOTHER
PREVENTS HAIR FALL & IMPROVES HAIR GROWTH 99446 36817



Murugan C
94879 78732
82203 51499
SM TRAVELS
Acting Drivers
Both 5 & 7 Seaters are available
24 HOUR SERVICE
No. 614 Nanjappa Gounder Street, Rathinapuri, Coimbatore - 641 027.




# துலீப் டிராபி 2025

## அணிகள், வடிவம், அட்டவணை

இந்தியாவின் புதிய உள்நாட்டு கிரிக்கெட் சீசன் ஆகஸ்ட் 28, 2025 அன்று துலீப் டிராபியுடன் தொடங்குகிறது. இந்த ஆண்டு, போட்டி மீண்டும் மண்டல வடிவில் நடைபெறுகிறது. கடைசியாக இந்த வடிவம் 2023–24 சீசனில் பயன்படுத்தப்பட்டது. இந்த முறை வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, மத்திய, வடகிழக்கு ஆகிய ஆறு மண்டல அணிகள் பங்கேற்கின்றன. அனைத்துப் போட்டிகளும் பெங்களூருவில் உள்ள புதிய சிறப்பு மையத்தில் நடைபெறும்.

சுப்மன் கில், யஷஸ்வி ஜெய்ஸ்வால், துருவ் ஜூரெல், ஷர்துல் தாக்கூர், குல்தீப் யாதவ், அர்ஷ்தீப் சிங், அபிமன்யு ஈஸ்வரன் ஆகியோர் உள்ளிட்ட முக்கிய வீரர்கள் களமிறங்க உள்ளனர். மேலும், ஷ்ரேயாஸ் ஐயர், இஷான் கிஷான், முகமது ஷமி போன்றவர்கள் அணிக்கு திரும்பும் வாய்ப்பைத் தேடி விளையாடுகிறார்கள்.

### போட்டி வடிவம்

கடந்த சீசனில் ரவுண்ட்–ராபின் முறையில் நடந்த போட்டி, இம்முறை நாக்அவுட் முறையில் நடைபெறும். 2023 இறுதிப் போட்டியாளர்களான தென் மண்டலம் மற்றும் மேற்கு மண்டலம் நேரடியாக அரையிறுதிக்கு தகுதி பெறுகின்றன. மத்திய, கிழக்கு, வடக்கு, வடகிழக்கு அணிகள் காலிறுதியில் மோதுகின்றன.

### அணிகள்

**தென் மண்டலம்:** திலக் வர்மா (கேட்ச்), முகமது அசாருதீன் (விசி), தன்மய் அகர்வால், தேவ்தத் படிக்கல், மோஹித் காலே, சல்மான் நிசார், நாராயண் ஜெகதீசன், திரிபுரானா விஜய், ஆர் சாய் கிஷோர், தனய் தியாகராஜன், விஜய்குமார் வைஷாக், நிதீஷ், பாசில் என்.பி. எம்.டி. சினேகல் கவுதாங்கர். (காத்திருப்பவர்கள்: மோஹித் ரெட்கர், ஆர் ஸ்மரன், அங்கித் ஷர்மா, ஈடன் ஆப்பிள் டாம், ஆண்ட்ரே சித்தார்த், ஷேக் ரஷீத்)

**கிழக்கு மண்டலம்:** இஷான் கிஷன் (கேட்ச்), அபிமன்யு ஈஸ்வரன் (விசி), சந்தீப் பட்நாயக், விராட் சிங்,



டெனிஷ் தாஸ், ஸ்ரீதாம் பால், ஷரன்தீப் சிங், குமார் குஷாக்ரா, ரியான் பராக், உத்கர்ஷ் சிங், மனிஷி, சூரஜ் சிந்து ஜெய்ஸ்வால், முகேஷ் குமார், ஆகாஷ் தீப், முகமது ஷமி. (காத்திருப்பவர்கள்: முக்தார் ஹூசைன், ஆசிர்வாத் ஸ்வைன், வைபவ் சூர்யவன்ஷி, ஸ்வஸ்திக் சமல், சுதிப் கிர் கராமி, ராகுல் சிங்)

**மேற்கு மண்டல அணி:** ஷர்துல் தாக்குர் (கேட்ச்), யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஆர்யா தேசாய், ஹார்விக் தேசாய் (விக்கெட் கீப்பர்), ஷ்ரேயாஸ் ஐயர், சர்பராஸ் கான், ருதுராஜ் கெய்க்வாட், ஜெய்மீத் படேல், மனன் ஹிங்ராஜியா, சவுரப் நவாலே (விக்கெட், ஷாம்ஸ்கேலா, தர்மாஷ்கேலா, தர்மாஷ்கேலா), ஜடேஜா, துஷார் தேஷ்பாண்டே, அர்சான் நாக்வாஸ்வாலா. (காத்திருப்பவர்கள்: மகேஷ் பித்தியா, ஷிவாலிக் ஷாமா, முகேஷ் சவுத்ரி, சித்தாராத் தேசாய், சிந்தன் கஜா, உர்வில் படேல், முஷீர் கான்)

**வடக்கு மண்டல அணி:** ஷுப்மன் கில் (கேட்ச்), ஷுபம் கஜூரியா, அங்கித் குமார் (விசி), ஆயுஷ் படோனி, யாஷ் துல், அங்கித் கல்சி, நிஷாந்த் சந்து, சாஹில் லோத்ரா, மயங்க் டகர், யுத்வீர் சிங் சரக், அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா, அன்ஷுல் காம்போஜ், ஏ. (காத்திருப்பவர்கள்: சுபம் அரோரா (வாரம்), ஜஸ்கரன்வீர் சிங் பால், ரவி சவுகான், அபித் முஷ்டாக், நிஷுங்க் பிர்லா, உமர் நசீர், திவேஷ் சர்மா)

**மத்திய மண்டல அணி:** துருவ் ஜூரெல் (சி/வாக்), ரஜத் படிதார், ஆர்யன் ஜூயல், டேனிஷ் மாலேவார், சஞ்சீத் தேசாய், குல்தீப் யாதவ், ஆதித்யா தாகரே, தீபக் சாஹர், சரண்ஷ் ஜெயின், ஆயுஷ் பாண்டே, சுபம் சர்மா, யாஷ் ரதோட், ஹர்ஷ் துபே, ஹர்ஷ் துபே, ஹர்ஷ் துபே. (காத்திருப்பவர்கள்: மாதவ் கௌசிக், யாஷ் தாக்கூர், யுவராஜ் சவுத்ரி, மஹிபால் லோம்ரோர், குல்தீப் சென், உபேந்திர யாதவ்)

**வடகிழக்கு மண்டலம்:** ஜொனாதன் ரோங்சென் (கேட்ச்), ஆகாஷ் குமார் சௌத்ரி, டெச்சி டோரியா, யும்னும் கர்னாஜித், செடெஜாலி ரூபெரோ, ஆஷிஷ் தாபா, ஹெம் பகதூர் சேத்ரி, ஜெஹு ஆண்டர்சன், அர்பித் சுபாஷ் பதேவாரா, பெரோய்ஜாம் ஜோதின் சிங், பல்ஸர் தமாங், அன்குர் மாலிக், அன்குர் மாலிக் போரா, லமாபம் அஜய் சிங். (காத்திருப்பவர்கள்: கம்ஷா யாங்ஃபோ, ராஜ்குமார் ரெக்ஸ் சிங், பாபி ஜோதன்சங்கா, திப்பு சங்மா, புக்ரும்பம் பிரபுல்லோமணி சிங், லீ யோங் லெப்சா, இம்லிவதி லெம்தூர்)

### அட்டவணை

காலிறுதி 1: ஆகஸ்ட் 28–31
வடக்கு மண்டலம் vs கிழக்கு மண்டலம்

காலிறுதி 2: ஆகஸ்ட் 28–31
மத்திய மண்டலம் vs வடகிழக்கு மண்டலம்

அரையிறுதி 1: செப்டம்பர் 4–7
தென் மண்டலம் vs வெற்றியாளர் QF1


அரையிறுதி 2: செப்டம்பர் 4–7
மேற்கு மண்டலம் vs வெற்றியாளர் QF2

இறுதி: செப்டம்பர் 11–15
வெற்றியாளர் SF1 vs வெற்றியாளர் SF2



# பிரதமர் மோடியை மெஸ்ஸி சந்திக்கிறார்

## 14 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா வருகை



உலகப் புகழ்பெற்ற அர்ஜென்டினா கால் பந்து நட்சத்திர வீரர் மெஸ்ஸி வருகின்ற டிசம்பர் மாதம் 12ஆம் தேதி இந்தியா வருகிறார். தனது சுற்றுப்பயணத்தை கொல்கத்தாவில் தொடங்கி அகமதாபாத் மும்பை மற்றும் புது டெல்லியில் மேற்கொள்ள இருக்கும் அவர், டிசம்பர் 15ஆம் தேதி GOAT இசை நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு முன்பாக, பிரதமர் மோடியை மரியாதை நிமித்தமாக சந்திக்க உள்ளார். இதற்கு முன்னதாக 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற வெனிசுலா அணிக்கு எதிராக சர்வதேச நட்புறவு கால்பந்துபோட்டியில் பங்கேற்றார். மேலும் மெஸ்ஸி தலைமையில் 2022 |ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து போட்டியில், உலக கோப்பையை வென்று அசத்தினார்.14 ஆண்டுகளுக்கு பிறகு இரண்டாவது முறையாக மெஸ்ஸி இந்தியா வருவது, இந்திய ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# டென் டென் செஸ் அகாடமி சார்பில் சென்னையில் மாநில செஸ் போட்டி



டென் டென் செஸ் அகாடமி சார்பில் மாநில அளவிலான 9வது சதுரங்க போட்டி வரும் ஆகஸ்ட் 31ம் தேதி கேட்வே இன்டர்நேஷனல் பள்ளி சென்னையில் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெற உள்ளது. 7 வயது முதல் 17 வயது வரை போட்டியில் பங்கு பெற்றுக் கொள்ளலாம். பரிசாக மொத்தம் 210 கோப்பைகள் வழங்க உள்ளனர், ஒவ்வொரு பிரிவிலும் தலா 20 கோப்பைகள் மற்றும் 5 பதக்கங்கள் வழங்கப்பட உள்ளது. கூடுதல் தகவலாக சென்னையில் சதுரங்கப் பயிற்சிகள் ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் மூலமாக கற்பிக்கப்படும் என்றத் தகவலை டென் டென் செஸ் அகாடமியின் செயலாளர் திரு. அமர்நாத் அவர்கள் தெரிவித்துள்ளார். போட்டியில் கலந்து கொள்ள பதிவு செய்ய வேண்டிய வாட்ஸ் அப் எண்கள் மற்றும் வலைதள முகவரி : 8438221095 / 9500044703

## 2025-26 சீசனுக்கு

# ‘கடுமையான காயம் மாற்று’ விதியை பிசிசிஐ அறிமுகப்படுத்தியுள்ளது

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (BCCI), வரவிருக்கும் 2025–26 உள்நாட்டு சீசனில் பல நாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான விதிகளை திருத்தி, ‘கடுமையான காயம் மாற்று’ (Serious Injury Replacement) என்ற புதிய விதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

### பின்னணி

இந்த முடிவு, ரிஷப் பந்த் இங்கிலாந்துக்கு எதிரான மான்செஸ்டர் டெஸ்டில் கடுமையான காயம் அடைந்தும் பேட்டிங் செய்ய வேண்டியிருந்த சம்பவத்திற்குப் பிறகு எடுக்கப்பட்டது. மேலும், ஆண்டர்சன் டெண்டுல்கர் டிராபியின் போது கிறிஸ் வோக்ஸ் தோள்பட்டை இடப்பெயர்ச்சி அடைந்தும் களமிறங்க வேண்டிய நிலை ஏற்பட்டதால், விதி பற்றிய விவாதம் அதிகரித்தது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) இத்தகைய விதியை இன்னும் செயல்படுத்தாத நிலையில், BCCI உள்நாட்டிலேயே இதை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.

### முக்கிய அம்சங்கள்

இந்த விதி பல நாள் போட்டிகளில் மட்டுமே அமல்படுத்தப்படும்; சையத் முஷ்டாக் அலி அல்லது விஜய் ஹசாரே டிராபி போன்ற



வெள்ளைப் பந்து தொடர்களுக்குப் பொருந்தாது. 19 வயதுக்குட்பட்ட சிகே நாயுடு டிராபி பல நாள் போட்டிகளிலும் இது பொருந்தும். ‘கடுமையான காயம் மாற்று’ விதி, ஏற்கனவே நடைமுறையில் உள்ள ‘மூளையதிர்ச்சி மாற்று விதி’ போலவே செயல்படும்.

### விதியின் சாரம்

1. ஒரு வீரர் ஆட்டத்தின் போது வெளிப்புற தாக்கத்தால் எலும்பு முறிவு, ஆழமான வெட்டு, இடப்பெயர்வு போன்ற கடுமை யான காயம் அடைந்து தொடர முடியாதபோது மட்டுமே மாற்று அனுமதிக்கப்படும்.
2. நடுவர்கள் இறுதி முடிவை எடுப்பார்கள்; அவசியமெனில் மைதான மருத்துவரின் கருத்தும் பெறப்படலாம்.
3. மாற்று வீரர், டாஸ் நேரத்தில் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலிலிருந்தே வர வேண்டும். (விக்கெட் கீப்பர் விதிவிலக்காக வெளியே இருந்து அனுமதிக்கப்படலாம்.)
4. மாற்று வீரர், காயமடைந்த வீரரின் பங்கு/ நிலைக்கு ஏற்ப தேர்வு செய்யப்பட வேண்டும்.
5. மாற்று அங்கீகரிக்கப்பட்டவுடன், அசல் வீரர் போட்டியில் மீண்டும் பங்கேற்க முடியாது.
6. புள்ளிவிவரங்களில், காயமடைந்த வீரரும், மாற்று வீரரும் போட்டியில் விளையாடியதாகக் கருதப்படுவார்கள்.
7. மாற்று தொடர்பான BCCI போட்டி நடுவரின் முடிவே இறுதி; மேல்முறையீடு செய்ய முடியாது.





அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தனியார் அமைப்புகள், பள்ளி மற்றும் கல்லூரிகள் தங்களது செய்திகளை , நிகழ்ச்சிகள் குறித்து
dinaidhigainews@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

விளம்பரத்துக்கு கீழே உள்ள எண்களை அணுகவும்!

7418 57 57 47 | 90 47 37 57 47 | 9894196795



SPORTS LAND TM

ALL SPORTS & FITNESS EQUIPMENTS

SPORTS GOODS SUPPLIER TO
SCHOOL COLLEGE CLUB




21223, 25330 WEST AROKLISAMY ROAD; OPPSASTRI GROUND, IRS. PURAM COIMDATORE - 641000-PM 0025:24/71/7 0 2355577
www.sportsland.store

sports_land_cbe

For More Details Contact: sportsland@gmail.com
98435-21717 | 97877-99999

# உக்கடம் பைபாஸ் ரோட்டை இணைக்கும் புதிய சாலை



கோவை மாநகரில் லங்கா கார்னருடன் உக்கடத்தை இணைக்கும் புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளது.இந்த புதிய சாலை லங்கா கார்னர் ரயில்வே பாலத்தின் அருகே தொடங்கி, ஏரியை ஒட்டிச்சென்று உக்கடம் பைபாஸ் அருகே உள்ள வின்செண்ட் சாலை சந்திப்பில் முடிகிறது. வாலாங்குளம் அணைக்கரை வழியாக சுமார் 805 மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்ட இந்த புதிய சாலை ஆகஸ்ட் 14 2025 வியாழக்கிழமை மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது. இந்த புதிய சாலையானது இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் இயங்கக் கூடிய இச்சாலையை கோயம்புத்தூர் மக்களவை உறுப்பினர் திரு கணபதி ராஜ்குமார், மாவட்ட ஆட்சியர் பவன் குமார் ஜி. கிரியப்ப நவர், மாநகராட்சி ஆணையர் எம். சிவகுரு பிரபாகரன் ஆகியோரின் தலைமையில் இந்த புதிய சாலை திறந்து வைக்கப்பட்டது.

லங்கா கார்னர் முதல் உக்கடம் வரை நேரடி இணைப்பை உருவாக்கும் இந்தச் சாலை, டவுன்ஹால் சந்திப்பிலும், வின்செண்ட் ரோடு பகுதியில் இருக்கும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் புதிய சாலை முழுவதுமாக ஒரு வழிச் சாலையாக இயங்கும். லங்கா கார்னரில் இருந்து உக்கடம் நோக்கி மட்டும் இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் செல்ல முடியும் இது பிக் பஜார் ரோடு வழியாக உக்கடம் நோக்கி செல்லும் பயணிகள் போக்குவரத்தைச் சீராக்கும். மேலும் குட்ஷெட் ரோடு பிக் பஜார் ரோடு சந்திப்புகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மாற்று வழியாக அமையும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 2040-ம் ஆண்டுக்குள் இந்தியர்களில் 5 பேரில் ஒருவர் மூத்த குடிமக்கள்

## நம்ம வீடுகள் தயார் தானா?

இன்றைய இந்தியாவில் சுமார் 150 மில்லியன் பேர் 60 வயதுக்கு மேல் வாழ்கிறார்கள். 2040க்குள் இந்த எண் 346 மில்லியனாக உயரும். அதாவது ஒவ்வொரு ஐந்து பேரில் ஒருவரே மூத்தவர். அதிலும் எண்பது வயதுக்கு மேற்பட்டோர் அதிக வேகத்தில் உயர்வார்கள். பெரும்பாலானவர்கள் பெண்கள்; பலர் விதவைகள். இதன் மூலம், முதன்முறையாக குழந்தைகளைவிட மூத்தவர்கள் அதிகமாக இருப்பார்கள். "உலகின் இளைய நாடு" என்று பெருமைப்படும் இந்தியா, விரைவில் உலகின் முதியோர் நாடுகளில் ஒன்றாக மாறும். இந்த மாற்றம் எண்களில் மட்டும் அல்ல, வீடுகள், சுகாதாரம், வேலைவாய்ப்பு, நகர திட்டமிடல், பொருளாதாரம் அனைத்தையும் பாதிக்கும்.



உலகளவில் silver economy 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியாவும் 2050க்குள் இதன் மையமாக இருக்கும். மூத்தவர்கள் சார்ந்தவர்கள் மட்டுமல்ல; அவர்கள் சுகாதாரம், வீடு, காப்பீடு, தொழில்நுட்பம், நலன் ஆகியவற்றின் முக்கிய வாடிக்கையாளர்கள். ஒவ்வொரு புதிய மூத்தவரும் பாதுகாப்பான வீடுகள், பராமரிப்பாளர்கள், சமூக உறவுகள் ஆகியவற்றின் தேவை ஏற்படுத்துகிறார்கள். இது சமூக கடமையாக மட்டுமல்ல; பொருளாதார வளர்ச்சிக்கான புதிய இயந்திரமாகவும் பார்க்கப்பட வேண்டும். ஆனால் எண்கள் சிக்கலை வெளிப்படுத்துகின்றன.

2040க்குள் 346 மில்லியன் மூத்தவர்கள் என்றால் குறைந்தபட்சம் 3.5 முதல் 4 மில்லியன் senior living homes தேவைப்படும். யதார்த்தமாக பார்த்தால் இந்த எண் ஏழு மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும். ஆனால் இன்று இந்தியாவில் உள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட வீடுகள் ஒரு லட்சத்துக்கும் குறைவு. அதிலும் பெரும்பாலானவை independent living communities. Assisted living, memory care வசதிகள் கிட்டத்தட்ட இல்லாததால் தேவை மற்றும் சப்ளை இடையிலான வித்தியாசம் மிகப் பெரியதாக உள்ளது. செலவு மிகப்பெரிய தடையாகிறது. எழுபது சதவீத மூத்தவர்கள் பிறரின் உதவியைச் சார்ந்துள்ளனர். மூன்றில் நான்கு பேருக்கு pension cover கூட இல்லை. Luxury villas சிலருக்கே எட்டும்; பெரும்பாலானோருக்கு அவை கனவாகவே இருக்கும். சட்ட ரீதியாகவும் குழப்பம் உள்ளது. வீடுகளுக்கும் பராமரிப்புக்கும் ஒன்றிய தரநிலைகள் இல்லாததால் developers எச்சரிக்கையாகவும், முதலீட்டாளர்கள் தயக்கத்துடனும் இருக்கிறார்கள்.

பணியாளர் பற்றாக்குறையும் அடுத்த சவாலாகும். ஆயிரக்கணக்கான caregivers, நர்சுகள், மேலாளர்கள் தேவைப்படும். ஆனால் தற்போதையப் பயிற்சிகள் மருத்துவமனை மையமாக மட்டுமே உள்ளன. குடியிருப்பு மையங்களில் பராமரிப்பு இன்னும் புறக்கணிக்கப்படுகிறது. மேலும், சமூக மனப்போக்கு தடையாகவே உள்ளது. பலர் senior living என்பதை "கைவிடல்" என்று தவறாக எண்ணுகிறார்கள்; உண்மையில் அது சுயநிறைவு தரும் புதிய வாழ்க்கை முறை.

இவ்வாறான சவால்களுக்கிடையே வாய்ப்புகள் நிறைய உள்ளன. பழைய வீடுகளை senior-friendly ஆக்கலாம் ராம்புகள், கைப்பிடிகள், அதிக ஒளி ஆகிய மாற்றங்களின் மூலம். 60 75 வயதுக்குள் உள்ளவர்களுக்குச் சமூக வாழ்க்கையும் சுகாதார ஆதரவும் இணைந்த independent living communities மிகவும் கவர்ச்சியாக இருக்கும். நடுத்தர வர்க்கத்திற்காக rental மற்றும் membership models உருவாகி வருகின்றன; அவை ஆரம்ப செலவினைக் குறைத்து அணுகுமுறையை எளிதாக்குகின்றன. எண்பது வயதுக்கு மேற்பட்டோருக்கு assisted living மற்றும் dementia care தவிர்க்க முடியாத தேவைகளாக மாறும். எதிர்காலத்தில் ஒரே கம்யூனிட்டியிலேயே சுயாதீன வாழ்விலிருந்து பராமரிப்புத் தேவையுள்ள வாழ்க்கைக்கு மாறும் continuum of care campuses முக்கியப்பங்கு வகிக்கவிருக்கின்றன.

குடும்பங்களின் பார்வையில் பாதுகாப்பும் அவசர உதவியும் மிக முக்கியமானவை. பிரம்மாண்டமான அழகுபடுத்தல்கள் அல்ல, தெளிவான மாதாந்திரக் கட்டணங்கள்தான் மதிக்கப்படுகின்றன. மேலும், மூத்தவர்கள் விரும்புவது தோழமை மற்றும் நோக்கம். ஒரு தோட்டக்குழுவில் பங்கேற்பது, இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது அல்லது ஒருவருடன் டீ பகிர்ந்து குடிப்பது இவைகளே அவர்களின் வாழ்க்கையை நிறைவு செய்கின்றன.


டெவலப்பர்களின் பார்வையில் senior living என்பது வீடு விற்று விட்டு போவது அல்ல; அது தொடர்ச்சியான சேவை. திட்டங்கள் வெற்றி பெறுவது அழகிய கட்டுமானங்களால் அல்ல; உணவு, மருத்துவ இணைப்புகள், பராமரிப்பு மற்றும் care staff ஆகியவற்றின் தரத்தால் மட்டுமே. சுகாதார நிறுவனங்களுடன் புத்திசாலித்தனமான கூட்டாண்மைகள் செய்வது எதிர்கால வெற்றியை தீர்மானிக்கும். சட்டம் வரும்போது அதை அஞ்சாமல் வரவேற்க வேண்டும், ஏனெனில் அது நம்பகத்தன்மையும் முதலீட்டையும் கொண்டுவரும்.

2040க்குள் இந்தியாவில் senior living ஒரு விருப்பமோ செழிப்பானவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் வசதியோ அல்ல; அது ஒரு தேசிய அவசியம். மூத்தவர்கள் 346 மில்லியன் ஆகும் நிலையில், கேள்வி தேவை இருக்கிறதா என்பதல்ல; supply நேரத்தில் ஏற்படுத்த முடியுமா என்பதே. மூத்தவர்கள் சுமையாக அல்ல, மரியாதையும் பாதுகாப்பும், இணைவும் பெற வேண்டிய குடிமக்கள்.

# சிவகார்த்திகேயனுக்கு கிடைத்த பெரிய லக்கி சான்ஸ்

## முருகதாஸுக்கு மீண்டும் நம்பிக்கை பிடி!

அமரன்படவெற்றிக்குப்பின்னர் சிவகார்த்திகேயன் நடிப்பில் "மதராஸி " மற்றும் "பராசக்தி" என இரண்டு பிரமாண்டமான திரைப்படங்கள் தயாரிப்பில் உள்ளன. ஒருகாலத்தில் ஹிட் படங்களின் கிங்காகக் கருதப்பட்ட ஏ.ஆர். முருகதாஸ், கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியான தோல்வி படங்கள் காரணமாகச் சற்று பின்தங்கிய நிலையில் இருந்தார்.இதனால் பல முன்னணி ஹீரோக்கள் அவரைத் தவிர்த்து வந்த சூழ்நிலை உருவானது.




இந்த நிலையில், சிவகார்த்திகேயன் முன் வந்து முருகதாஸின் மீது நம்பிக்கை வைத்து இணைந்த படம் தான், இந்த "மதராசி". படம் வரும் செப்டம்பர் 5–ம், 2025 அன்று திரைக்கு வர இருக்கிறது. அதற்கான ஒரு முக்கிய அப்டேட், இந்த வாரத்தில் வெளியிடப்படும் என படக்குழு அறிவித்துள்ளது.

சமீபத்தில் ஒரு பேட்டியில் முருகதாஸ் சில சுவாரஸ்யமான தகவலை வெளியிட்டார். அவர் கூறியதாவது இந்த "மதராஸி" கதையை அவர் 8 வருடங்களுக்கு முன் ஷாருக்கானிடம் விவரித்தாராம். கதை ரொம்ப பிடித்ததால், ஷாருக்கான் ஓகே செய்தும் இருந்தாராம். அதன் பிறகு அவர் சில படங்களில் பிஸி ஆனதனால் தொடர்புகொள்ள முடியவில்லை. முயற்சி செய்து அணுகியபோது எந்த பதிலும் வராமல் இருந்தபடியால் விட்டுவிட்டாராம்.



இப்போது அந்தகதையை சிறிது விரிவுபடுத்தி மேலும் சில அம்சங்களைச் சேர்த்து, மிகச் சரியான தேர்வாக அமைந்த சிவகார்த்திகேயனிடம் ஒப்படைத்தார். இதனால், பாலிவுட் ஹீரோவுக்கு செல்லவிருந்த சான்ஸ்,சிவகார்த்திகேயனுக்குக் கிடைத்த பெரும் அதிர்ஷ்டமாக மாறியுள்ளது. மிக நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கும் முருகதாஸும், ஸ்டார் உச்சத்தில் இருக்கும் சிவகார்த்திகேயனும் சேர்ந்துள்ள இந்தக்கூட்டணி எப்படி அதிரடி காட்டப்போகிறது என இருவரின் ரசிகர்களும் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

பொறுப்பல்லை : இந்த செய்தித்தாளில் பிரசுரம் ஆகி உள்ள விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள்/ சேவைகள் அடிப்படையில் செயல்படும்முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக் கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள்/ சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்த செய்தித்தாளின் உரிமையாளரும், பதிப்பாளருக்கும் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின் மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர் பதிப்பாளர் அச்சிடுவோர் ஆசிரியர் இயக்குனர்கள் ஊழியர்கள் ஆகியோர் எந்த சூழலிலும் எந்த வகையிலும் அதற்கு பொறுப்பாக மாட்டார்கள். படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்து வைத்துக்கொண்டு அனுப்பவும் பிரசுரம் ஆகாதவற்றை திரும்ப அனுப்ப இயலாது.




Published by C Sathish Kumar on behalf of C Sathish Kumar, Printed by EXPRESS PRESS, at Coimbatore and published at NO.3, 3rd Street Thiruvalluvar Nagar Ramanathapuram, Coimbatore–641045. Editor : C Sathish Kumar.